செ.வெ.எண்: 10 நாள்: 05.02.2018

# புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (05.02.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து விலையில்லா வீட்டுமனைப் பட்டா கோரி 30 மனுக்களும், பட்டா மாறுதல் கோரி 20 மனுக்களும், குடும்ப அட்டை தொடர்பாக 5 மனுக்களும், காவல்துறை நடவடிக்கை கோரி 15 மனுக்களும், வேலைவாய்ப்பு கோரி 25 மனுக்களும், விலையில்லா தையல் இயந்திரம் வேண்டி 5 மனுக்களும், பசுமைவீடு, சாலைவசதி, குடிநீர்வசதி ஆகியவைகள் கோரி 35 மனுக்களும், முதியோர் உதவித்தொகை கோரி 20 மனுக்களும், ஆக்கிரமிப்பு அகற்றுதல் கோரி 15 மனுக்களும், இதர கோரிக்கைகள் தொடர்பாக 37 மனுக்களும் என மொத்தம் 210 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட அலுவலர்களிடம் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைள் தொடர்பாக மொத்தம் 18 மனுக்களை பெற்று இம்மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும் மாவட்ட ஆட்சியரகத்தில் (02.02.2018) அன்று நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர் கூட்டத்தில் மாதாந்திர உதவித்தொகை வேண்டி மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்ட மனுக்களின் மீது உரிய விசாரணை மேற்கொண்டு இன்றய தினம் 33 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணைகளை வழங்கினார்.

பின்னர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 8 நபர்களுக்கு உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரிய அட்டைகளையும், மாநில அளவிலான கபாடி போட்டியில் கலந்து கொள்ளவுள்ள மாணவிகளுக்கு போட்டிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் வாங்க பெருங்காடு அரசு உயர் நிலைப்பள்ளியை சேர்ந்த 12 மாணவிகளுக்கும், கட்டுமாவடி அரசு மேல்நிலைப்பள்ளியை சேர்ந்த 12 மாணவிகளுக்கும் மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியின் கீழ் தலா ரூ.2000 வீதம் மொத்தம் ரூ.48,000 மதிப்பில் நிதியுதவி தொகைக்கான காசோலைகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**